தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 11, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 ஏப்ரல் 24, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை *10-00* மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம் ஏர்த் தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே, எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் *301*, திருமதி எஸ். கனிதா சம்பத், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

301—

நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்

***6040—திருமதி எஸ். கனிதா சம்பத்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, செங்கல்பட்டு-திருப்போரூர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது, செங்கல்பட்டு-திருப்போரூர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி எஸ். கனிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு-திருப்போரூர் பாதை, ஒருவழிப் பாதையாக இருப்பதால், அங்கே நிறைய விபத்துகள் ஏற்படுகின்றன. அதுமட்டும் இல்லாமல், திருப்போரூரில் புகழ்பெற்ற முருகன் கோவில் உள்ளது. மகாபலிபுரம், கோவளம், முட்டுக்காடு, எம்.ஜி.எம். போன்ற சுற்றுலாத்தலங்களும் அதிகமான தொழிற்பேட்டைகளும் உள்ளதால் இதனை மறுபரிசீலனை செய்து, ஒருவழிப்பாதையாக உள்ளது இருவழிப்பாதையாக, இந்த நிதியாண்டிலே மாற்றிக் கொடுக்கப்படுமா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு-திருப்போரூர் சாலையானது கிலோ மீட்டர் 0/0 முதல் 21/8 வரை நெடுஞ்சாலைத் துறையால் மாவட்ட இதரச் சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையானது 3.66 மீட்டர் அகலமுள்ள ஒருவழிப் பாதையாக உள்ளது. இச்சாலையை 5.50 மீட்டர் அகலமுள்ள இடைவெளிப் பாதையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்ய, தோராயமாக ரூ.100 இலட்சம் தேவைப்படும். இச்சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணியானது ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம்பெறவில்லை. இருப்பினும், இப்பணியை எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம்.

2003 ஏப்ரல் 24]

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நிதிநிலைமைக்கேற்ப செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே அதைச் செய்தால், அது சென்னையினுடைய நெரிசலைக் குறைப்பதற்கு; தொழிற்சாலைப் பகுதியாக இருக்கிற திருப்போரூர், சோழிங்கநல்லூர், திருவான்மியூர் போன்ற பகுதிகளுக்கு, நெடுந்தூரத்திலிருந்து, தென் மாவட்டங்களிலேயிருந்து வரும் வாகனங்கள் செங்கல்பட்டிலேயிருந்து திருப்போரூர் வழியாகச் செல்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, அதற்காக நம்முடைய அமைச்சர் அவர்கள், முன்னுரிமை அடிப்படையிலே இந்த ஆண்டே அதை எடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப மேம்பாடு செய்யப்படும் என்று சொன்னேன். வரும் நிதியாண்டு என்றால், இந்த ஆண்டும் சேரும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 302, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

302—

மேம்பாலம்

***9813—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி-பெரியகுளம் நெடுஞ்சாலையிலும், தேனி-மதுரை நெடுஞ்சாலையிலும் இரயில்வே இருப்புப்பாதை, சாலைகளின் குறுக்கே செல்வதால், அவ்விடங்களில் மேம்பாலங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?